செய்தி வெளியீடு எண்.08-2018 நாள்: 05.04.2018

# விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களில் காலியாக உள்ள 6 கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

****

விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களில் காலியாக உள்ள 6 கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு அருகில் உள்ள கிராமங்களில் உள்ளவர்கள் மட்டும் இனசுழற்சி முறையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யும் பொருட்டு பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை 09.04.2018 முதல் 25.04.2018 (அரசு விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர) தேதிக்குள் நேரடியாக வட்டாட்சியர் அலுவலகத்தில் விருப்பமுள்ள தகுதியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

இப்பணியிடத்திற்கு ஊதிய விகிதம் Level-6, Index-1, Rs.11000/-, குறைந்த பட்சம் பொது கல்வித்தகுதி 5-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். சைக்கிள் ஓட்ட தெரிநித்திருக்க வேண்டும். வயது வரம்பு 01.01.2018 அன்று உள்ளவாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குறைந்த பட்சம் 21 வயது (முடித்து இருக்க வேண்டும்) முதல் அதிக பட்சம் 35 வயது இருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் குறைந்த பட்சம் 21 வயது (முடித்து இருக்க வேண்டும்) முதல் அதிக பட்சம் 32 வயது இருக்க வேண்டும். இதர வகுப்பினர் குறைந்த பட்சம் 21 வயது (முடித்து இருக்க வேண்டும்) முதல் அதிக பட்சம் 30 வயது இருக்க வேண்டும்.

கல்லப்பட்டு கிராமம் - அருகில் உள்ள கிராமம் மேல்பாதி, நரையூர், பனங்குப்பம், கோலியனூர், குமாரகுப்பம், வளவனூர், செங்காடு, வடுகநாதன்குப்பம் - இனசுழற்சி பொது – 1 பணியிடம்.

காவணிப்பாக்கம் கிராமம் - அருகில் உள்ள கிராமம் திருப்பாச்சனூர், தளவானூர், வேடப்பூர், கோங்கரகொண்டான், வேளியம்பாக்கம், அத்தியூர்திருவாதி, சித்தாத்தூர், திருக்கை, கண்டமானடி, கொளத்தூர் - இனசுழற்சி இதர பிற்படுத்தப்பட்டோர் பெண்கள் - 1 பணியிடம்.

சோழம்பூண்டி கிராமம் - அருகில் உள்ள கிராமம் எடப்பாளையம், ஆசாரங்குப்பம், விழுப்புரம், விராட்டிக்குப்பம், ஆலாத்தூர், நன்னாடு, வேடம்பட்டு, அரியூர், வெங்காந்தூர் - இனசுழற்சி பொது – 1 பணியிடம்.

பள்ளிச்சேரி கிராமம் - அருகில் உள்ள கிராமம் கொத்தம்பாக்கம், பள்ளிப்புதுப்பட்டு, மிட்டாமண்டகப்பட்டு, சொரப்பூர், வீராணம், ஆழியூர், பள்ளிநேலியனூர் - இனசுழற்சி இதர தாழ்த்தப்பட்டோர் பொது – 1 பணியிடம்.

பள்ளியந்தூர் கிராமம் - அருகில் உள்ள கிராமம் கோழிப்பட்டு, மாம்பழப்பட்டு, கொண்டியங்குப்பம், காங்கியனூர், அரியலூர் திருக்கை, மல்லிகைப்பட்டு, காணை - இனசுழற்சி மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் பெண்கள் - 1 பணியிடம்.

மரகதபுரம் கிராமம் - அருகில் உள்ள கிராமம் கண்டம்பாக்கம், பிடாகம், வழுதரெட்டி, கண்டமானடி, கண்டியமடை, ஜானகிபுரம், கோவிந்தபுரம் - இனசுழற்சி இதர பிற்படுத்தப்பட்டோர் பொது – 1 பணியிடம்.

அரசு விதிகளின்படி வயது தளர்வு செய்யப்படும். விண்ணப்பிக்கும் முறை விண்ணப்பதாரர்கள் விழுப்புரம் வட்டத்தில் வசித்து வருபவராக இருக்க வேண்டும்.

மனுதாரர்கள் பெயர் மற்றும் முகவரி, பிறந்த தேதி வயது, சாதி, வருமானம், இருப்பிடம், குடும்பஅட்டை (இருப்பின்) எண், ஆதார் அட்டை (இருப்பின்) எண், வேலைவாய்ப்பு அட்டை (இருப்பின்) எண், முன்னுரிமைக்கான சான்று, பாஸ்போர்ட் அளவு போட்டோ-3 ஆகிய விவரங்களுடன் சுயவிலாசமிட்ட 10X12 கவர் ஆகியவற்றை இணைத்து அனைத்து ஆவணங்களின் நகல்கலுடன் விண்ணப்பங்களை 25.04.2018 அன்று மாலை 5.00 மணி வரை விழுப்புரம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரடியாக அளிக்க வேண்டும். தகுதியுள்ள மனுதாரர்கள் விழுப்புரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முக தேர்வில் கலந்து கொள்ள தனியே அழைப்பு கடிதம் அனுப்பப்படும். சிபாரிசு மற்றும் பரிந்துரை கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.